பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 10 2023 7 15

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு இதுவே சரியான தருணம் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதற்கு தொழில்துறை தயாராக இருக்க வேண்டுமென்று மத்திய இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் கேட்டுக் கொண்டுள்ளார்.
3. தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் கட்டுக்குள் உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
4. இலக்கியத்திற்கான நோபல் பரிசு நார்வே நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் Jon Fosse -வுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
5. உலகக்கோப்பை ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில், நியூசிலாந்து வெற்றிபெற 283 ரன் என்ற இலக்கை இங்கிலாந்து நிர்ணயித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

[]<<<>>>[]

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு இதுவே சரியான தருணம் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் ஜபல்பூரில் 12 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் அவர் உரையாற்றினார்.

பழங்குடியின மக்களுக்கு மரியாதை அளிக்க முந்தைய காங்கிரஸ் அரசு தவறிவிட்டதாக அவர் குற்றம்சாட்டினார்.

பழங்குடியினரின் நலனை பாதுகாக்க மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆட்சியின்போது தனி அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டதை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம் பழங்குடியினருக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு அவர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

அரசு பணம் வீணடிக்கப்பட்ட நிலைமையை மாற்றி, ஜன்தன் வங்கிக் கணக்கு, ஆதார் எண் இணைப்பின் மூலம் இரண்டரை லட்சம் கோடி ரூபாய் கருவூலத்தில் சேமிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மத்திய பிரதேச மாநிலத்தின் வளர்ச்சி என்பது ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சியாகும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்,

அடுத்த 25 ஆண்டுகள் மிகவும் முக்கியமானது என்பதால், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டிய தருணம் ஏற்பட்டிருப்பதாகவும், அதற்காக கடினமாக உழைக்க வேண்டுமென்றும் திரு நரேந்திரமோடி வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் ராணி துர்க்காவதி அருங்காட்சியகத்துக்கு பிரதமர் அடிக்கல் நாட்டியதுடன், நினைவு தபால் தலையையும் வெளியிட்டார்.

[]<<<>>>[]

தேசிய கல்விக்கொள்கை ஆராய்ச்சி மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கம் அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சென்னையில் உள்ள ஆளுநர் மாளிகையில் வள்ளலாரின் 200-வது பிறந்த தினத்தையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில், ஒளிபரப்பான காணொலி செய்தியில், பிரதமர் இவ்வாறு கூறினார்.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஏராளமான பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும் தொடங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அன்பு, இரக்கம், நீதி என்ற வள்ளலாரின் போதனைகளை பரப்ப வேண்டும் என்றும் திரு நரேந்தர மோடி கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன், அனைவருக்கும் உணவு அளிக்க வேண்டும் என்பதற்காக வள்ளலார் வடலூர் சத்யஞான சபையை தோற்றுவித்தார்.

அதேபோல் பிரதமர் திரு நரேந்திரமோடி நாடு முழுவதும் 80 கோடி ஏழை மக்களுக்கு மாதந்தோறும் ஐந்து கிலோ உணவு தானியங்களை இலவசமாக வழங்கி வருவதாகத் திரு எல் முருகன் தெரிவித்தார்.

[]<<<>>>[]

புதுமை தொழில்நுட்பங்களை எதிர்கொள்வதில் தொழில்துறை முக்கிய ஆதாரமாக திகழும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று வர்த்தகம் மற்றும் தொழில் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு முக்கிய பங்கு உள்ளதாகக் கூறினார்.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறைகளில் க்வாண்டம் தொழில்நுட்பம் வேகமாக முன்னேறி வருவதாகவும், தொழில்துறையில் அதன் பங்கு குறிப்பிடத்தக்கதாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதற்கு தொழில்துறை தயாராக இருக்க வேண்டுமென்றும், டிஜிட்டல் இந்தியா மற்றும் இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் மூலம் உள்நாட்டு உற்பத்தி மேம்பட்டிருப்பதாகவும் அமைச்சர் திரு ஜிதேந்திரங் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

இளையோரின் பங்களிப்புடன் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்க முடியும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு அனுராக் தாக்கூர் கூறியுள்ளார்.

இன்று ராய்ப்பூரில் இளையோர் திருவிழாவை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

ஆசிய விளையாட்டுப்போட்டியில் இந்தியா பதக்கங்களை குவித்து வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதனை கண்டு நாடே பெருமிதம் கொள்வதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நாடு முழுவதும் தூய்மை இந்தியா இயக்கம் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி இருப்பதாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று திறன் மேம்பாடு குறித்த தேசிய கருத்தரங்கில் பேசிய அவர், உள்ளாட்சி அமைப்புகளில் திறனை மேம்படுத்த ஆணையம் அமைக்கப்பட்டு, முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

தூய்மை இந்தியா இயக்கம் கிராமப்புறங்களிலும் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி இருப்பதாகவும் திரு ஹர்தீப்சிங்பூரி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை பயிர் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 13 ஆயிரத்து 500 ரூபாய் இழப்பீடு வழங்க முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கர்நாடக மாநிலத்திலிருந்து காவிரி ஆற்றில் போதிய அளவு தண்ணீர் திறந்துவிடப்படாததால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க உத்தரவிட்டுள்ளார்.

பயிர் பாதிப்பு விவரங்கள் முறையாக கணக்கிடப்பட்டு, இந்த இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்று திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பரவல் கட்டுக்குள் உள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த ஒன்றாம் தேதி இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

டெங்கு காய்ச்சல் பாதிப்பு கண்டறியப்படும் பகுதிகளில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுவதாகவும், இதன் காரணமாக அது கட்டுக்குள் உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் பிஜேபி-யை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அக்கட்சியின் மாநிலத் தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசின் சாதனைகளை எடுத்துரைத்து மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ள உள்ளதாக கூறினார்.

தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளுக்கு இடையே நல்லுறவு நீடிப்பதாக அவர் தெரிவித்தார்.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்றும் திரு அண்ணாமலை குற்றம் சாட்டினார்.

[]<<<>>>[]

மத்திய பிரதேச மாநிலத்தில் அரசு துறைகளில் மகளிருக்கு 35 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும் என அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

இதற்காக அம்மாநில அரசின் சட்ட விதிகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக அரசின் அறிவிக்கை தெரிவிக்கிறது.

அதன்படி வனத்துறை நீங்கலாக அனைத்து துறைகளிலும் மகளிருக்கு வேலைவாய்ப்பில் 35 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

சிக்கிம் மாநிலத்தில் மேகவெடிப்பு காரணமாக ஏற்பட்ட வெள்ள நிலைமை குறித்து அம்மாநில முதலமைச்சர் திரு பி எஸ் தமங் உயரதிகாரிகளுடன் இன்று ஆலோசனை நடத்தினார்.

வெள்ளத்தால் 14 பேர் உயிரிழந்துள்ள நிலையில், நூற்றுக்கும் மேற்பட்டோர் காணாமல் போயிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் ராணுவத்தினருடன் இணைந்து மாநில மீட்புக்குழுவினர் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருவதன் முன்னேற்றம் குறித்து முதலமைச்சர் ஆலோசனை நடத்தினார்.

[]<<<>>>[]

இலக்கியத்திற்கான நோபல் பரிசு இந்த ஆண்டு நார்வே நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் Jon Fosse - வுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது,

புதுமையான நாடகங்கள் மற்றும் உரைநடைகளை எழுதியதற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்படுவதாக நோபல் பரிசுக்கான தெரிவுக் குழு தெரிவித்துள்ளது.

உலக அளவில் ஜான் போசேயின் உரைநடை பிரபலமடைந்து வருவதாகவும் அந்த குழு கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டி அகமதாபாதில் இன்று தொடங்கியது.

இங்கிலாந்துக்கு எதிரான முதல் போட்டியில் நியூசிலாந்து வெற்றிபெற 283 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, டாஸ் வென்ற நியூசிலாந்து முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதையடுத்து முதலில் பேட் செய்த இங்கிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 282 ரன் எடுத்தது. சென்னையில் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள போட்டியில் இந்தியா - ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

ஆசிய விளையாட்டுப்போட்டியில், இந்தியா இன்று 3 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

சீனாவின் **Hangzhou**–வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் வில்வித்தை ஆடவர் மற்றும் மகளிர் குழு பிரிவில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

ஸ்குவாஷ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவிலும் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

ஸ்குவாஷ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சௌரவ் கோஷல் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மல்யுத்த போட்டியின் மகளிர் 53 கிலோ எடைப்பிரிவில் **Antim Panghal** வெண்கலப்பதக்கம் வென்றார்.

கபடி போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 21 தங்கம், 32 வெள்ளி, 33 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் தொடர்ந்து நான்காவது இடத்தில் நீடிக்கிறது.

*End of News*